**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு T. சோழவேந்தன், B.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

*******

2024–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 – ம் நாள் வியாழக்கிழமை

******

**இடைமனு எண்.2/2023–ல் அசல் வழக்கு எண். 160/2009**

1. G.ராஜமாணிக்கம் (இறந்தார்) ... 1–ம் மனுதாரர்/வாதி
2. R. ஆழகுமதி
3. R.அம்பிகா
4. R.சுதன் .....2 முதல் 4 மனுதாரர்கள்/ வாதியின் வாரிசுகள்

...எதிர்...

1. ஜோதி
2. மூர்த்தி ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 31.01.2024 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு E.செல்வராஜ் அவர்களும், முதல் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு V.வெங்கடேசன் அவர்களும், 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு A.ராம்குமார் அவர்களும் ஆஜராகி, இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலணையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

அசல் வழக்கில் இறந்த ராஜமாணிக்கத்தின் வாரிசுகளான 2 முதல் 4 தரப்பினர்களை இவ்வழக்கில் வாதிகளாக சேர்த்து வழக்கை மேல் நடத்த அனுமதி கோரி இம்மனு உ.வி.மு.ச.கட்டளை–22, விதி–3–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்</u>**

(i) அசல் வழக்கில் 2 முதல் 4 மனுதாரர்கள் இறந்த ராஜமாணிக்கத்தின் வாரிசுகள். அசல் வழக்கு இறந்த வாதி ராஜமாணிக்கம் என்பவர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்பல் பரிகாரம் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கின் வாதி ராஜமாணிக்கம் கடந்த 09.04.2019 அன்று இறந்துவிட்டார். இறந்த ராஜமாணிக்கத்திற்கு மனைவி என்ற முறையில் 2–ம் மனுதாரரும், மகள் என்ற முறையில் 3–ம் மனுதாரரும், மகன் என்ற முறையில் 4–ம் மனுதாரரும் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். இவர்களை தவிர இறந்த ராஜமாணிக்கத்திற்கு வேறு வாரிசுகள் கிடையாது.

(ii) ராஜமாணிக்கம் கொடுக்க வேண்டிய தொகைகளுக்கும், அவருக்கு சேரவேண்டிய தொகைகளுக்கும் 2 முதல் 4 வரையிலான மனுதாரர்கள் சட்டப்படியான வாரிசுதாரர்கள் ஆவார்கள். வேறு வாரிசுகள் கிடையாது. எனவே ராஜமாணிக்கத்தின் வாரிசுகளான 2 முதல் 4 வரையிலான மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்த்து வழக்கையும் அத்துடன் தாக்கல் செய்யப்பட்ட மற்ற மனுக்களையும் மேல் நடத்த வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லை என்றால் ஏராள கஷ்டமும், நஷ்டமும் சம்பவிக்கும். எனவே அசல் வழக்கில் இறந்த ராஜமாணிக்கத்தின் வாரிசுகளான 2 முதல் 4 தரப்பினர்களை இவ்வழக்கில் வாதிகளாக சேர்த்து வழக்கை மேல் நடத்த அனுமதி கோரி 4–ம் மனுதாரர் தாக்கல் செய்த இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்

**<u>2. 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>**

(i) மனு சட்டபடியும், நியாயப்படியும் சரியல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. இந்த எதிருரையில் நேரடியாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர இடைமனுவில் கண்டுள்ள

சங்கதிகளை 2–ம் எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார். அவற்றை நிரூபிக்க 2 முதல் 4 மனுதாரர்கள்/வாதியின் வாரிகள் கடமைப்பட்டுள்ளார்கள். இவ்வழக்கின் வாதி ராஜமாணிக்கம் இறந்து விட்டார் என்பது உண்மை. அவரது வாரிசுகள் 2 முதல் 4 மனுதார்கள்/வாதியின் வாரிசுகள் மட்டுமே என்பது தவறு. ஏனெனில் இறந்த ராஜமாணிக்கத்திற்கு முதல் மனைவி அழகுமதி ஆவார். அவரை சட்டப்படி பிரிந்த பிறகே இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதியான ஜோதி என்பவரை 2–வது திருமணம் செய்து கொண்டார். ஜோதிக்கும், ராஜமாணிக்கமத்திற்கும் பிறந்த பிள்ளைகள் சுவாதி மற்றும் பிரியா ஆவார்கள். எனவே இறந்த ராஜமாணிக்கத்திற்கு 2 முதல் 4 மனுதாரர்கள் மற்றும் ஜோதி, சுவாதி மற்றும் பிரியா ஆகிய நபர்களும் வாரிசுகள் ஆவார்கள். இவர்களை வேண்டுமென்றே இவ்வழக்கில் மறைத்து கரைபடிந்த கரங்களுடன் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) மனுதாரர்கள் குறிபிட்டுள்ள அதே முகவரியில்தான் இறந்த ராஜமாணிகத்தின் 2–வது மனைவி ஜோதியும் அவர்களுக்கு பிறந்த பிள்ளைகளான சுவாதி மற்றும் பிரியாவும் வசித்து வந்தார்கள். இதனை உரிய முறையில் இவ்வழக்கில் நிரூபிக்க 2–ம் பிரதிவாதி தயாராக உள்ளார். இறந்த ராஜமாணிக்கத்தின் வாரிசுகளை சேர்ப்பதற்கு மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 1074 நாட்கள் காலதாமத்தை மன்னிக்க எந்த ஒரு காரணத்தையும் பெயருக்கு கூட இந்த இடைமனுவில் குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்தே இடைமனு தூய கரத்துடன் தாக்கல் செய்யப்படவில்லை என்பதையும், அதனால் தான் அதற்காக காரணத்தையும் இந்த இடைமனுவில் எந்த ஒரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. எனவே மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3.** இம்மனுவில் மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?**

**5. தீர்வு**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கு இறந்த வாதி ராஜமாணிக்கம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்பல் பரிகாரம் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கின் வாதி ராஜமாணிக்கம் கடந்த 09.04.2019 அன்று இறந்துள்ளார். இறந்த ராஜமாணிக்கத்தின் வாரிசுகளான 2 முதல் 4 மனுதரர்களை இவ்வழக்கில் வாதிகளாக சேர்க்க மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகள் கோரியுள்ளார்கள்.

(ii) பிரதிவாதிகள் தரப்பில் இறந்த ராஜமாணிக்கத்திற்கு 2–வது மனைவி ஜோதி மற்றும் அவருக்கு பிறந்த சுவாதி மற்றும் பிரியா என்ற மகள்கள் உள்ளனர் அவர்களை மறைத்து மனுதாக்கல் செய்துள்ளனர் என வாதிடப்பட்டது. 1–ம் வாதிக்கு இம்மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகளா அல்லது பிரதிவாதிகளின் கூற்றுப்படி 2வது மனைவி மற்றும் அவரது குழந்தைகளும் வாரிசுகளா என்பதை வழக்க சாட்சிய விசாரணையின் மூலமே முடிவு காண இயலும்.

(iii) மனுதாரர்கள் இம்மனுவில் கோரியுள்ள இறந்த வாதியின் வாரிசுகளான 2 முதல் 4 மனுதாரர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்தால் வழக்கின் வழக்கு மூலமோ, வழக்கின் தன்மையோ மாறிவிடப்போவதில்லை என்பதாலும், மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் பின்னிட்டு ஏற்படும் (Multiplicity proceedings) ஒரே பொருண்மையின் அடிப்படையில் ஏற்படும் வழக்கு நடிவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டு தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்றும், மனுவின் தன்மை கருதி தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு

செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

இறுதியில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/- T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

| | |
|---|---|
| <u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை - |
| <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை - |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை - |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை - |

(ஓம்/- T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.2/2022-ல்
அசல் வழக்கு எண்.160/2009
நாள்.15.02.2024.